மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07ம் நாள் வியாழக் கிழமை

1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு. ஆர்.சக்திவேல், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

அசல் வழக்கு எண். 426/2018 (பழைய எண்.414/2008) என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. நீலாவதி | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

07.02.2019 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

என்னுடைய தாயார் பெயர் என்ன என்றால் தஞ்சியம்மாள். சகாதேவன் என்னுடைய அம்மாவிற்கு என்ன உறவு முறை என்றால் உடன் பிறந்த தம்பி. சகாதேவன் எங்கு வேலை செய்திருந்தார் என்றால் முதலில் புத்தூரில் வேலை செய்தார், பின்பு கடப்பாவில் சென்று வேலை செய்தார். சகாதேவன் எந்த வருடம் பெரியகரம் கிராமத்திலிருந்து ஆந்திரா மாநிலத்திற்கு வேலைக்கு சென்றார் என்றால் 1976ம் ஆண்டிற்கு பிறகு தான் சென்றார். எப்போது எனக்கும் மேற்படி சகாதேவனுக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் 3.9.1976 தேதியில் திருமணம் நடந்தது. என்னுடைய திருமணத்திற்கு முன்பு வரை சகாதேவன் ஆந்திரா மாநிலத்திற்கு வேலைக்கு செல்லவில்லை, திருமணத்திற்கு பிறகு தான் சென்றார். எனக்கு திருமணம் நடைபெற்ற பிறகு எத்தனை வருடங்கள் கழித்து ஆந்திரா மாநிலத்திற்கு சகாதேவன் வேலைக்கு சென்றார் என்றால் சுமார் 2 வருடங்கள் கழித்து. என்னை ஏன் சகாதேவன் உடன் அழைத்துச் செல்லவில்லை என்றால் நான் சென்னையில் தனியார் அச்சகத்தில் வேலை செய்திருந்தேன். நான் வேலை செய்து வந்த காரணத்தால் தான் சகாதேவனுடன் ஆந்திரா மாநிலத்திற்கு செல்லவில்லை. என்னுடைய அம்மா வீடு சென்னையில் இருந்தது. அவருடன்

நானும் தங்கியிருந்தேன். எவ்வளவு நாட்கள் சென்னையில் பணிபுரிந்தேன் என்றால் 2 வருடங்கள் பணிபுரிந்தேன் பிறகு எனது கணவர் வேலை வேண்டாம் என்று சொல்லி என்னை அழைத்து வந்து விட்டார். எங்கு அழைத்து வந்தார் என்றால் பெரியகரம் கிராமத்திற்கு அழைத்து வந்து விட்டார். 2ம் வாதி எப்போது பிறந்தார் என்றால் 1991ம் வருடம் பிறந்தார். சகாவேனுக்கு 1ம் பிரதிவாதி மல்லிகா என்பவருடன் தொடர்பு இருந்தது என்பதும் அவர்களுக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்பதும் எப்போது தெரியும் என்றால் சகாதேவன் இறப்பாதற்கு 2 வருடங்களுக்கு முன்பு தான் தெரியும். மேற்படி விவரம் தெரிந்த பிறகு நான் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பணிப்பதிவேட்டிலும், பணி ஓய்வுத் தொகை பெறுவதற்கும் என்னை நியமிப்பதாகச் சொன்னார், அதனால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. சகாதேவன் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தான் அவருக்கு இன்னொரு குடும்பம் இருக்கும் விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். சகாதேவன் 2004ம் வருடம் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு பெரியகரம் கிராமத்திலேயே வந்து தங்கிவிட்டாரா என்றால் இல்லை, வந்து செல்வார், அவருக்கு அங்கு பைனான்ஸ் தொழில் இருந்தது. சகாதேவன் பணிபுரியும் காலத்தில் எத்தனை முறை புத்தூருக்கு சென்றிருக்கிறேன் என்றால் 2 முறை சென்றிருக்கிறேன். நான் புத்தூருக்கு சென்ற 2 முறையும் சகாதேவனுக்கு வேறு ஒரு குடும்பம் இருக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரிந்ததா என்றால் இல்லை. எனக்கு திருமணம் ஆகி 32 வருடங்களில் என்னை ஏன் தன்னுடன் அழைத்துச்செல்லவில்லை என்றால் ஊரில் நிலத்தை பார்த்துக்கொள்வதற்காக என்னை இங்கேயே இருக்கச்சொன்னார். என்னை சகாதேவன் திருமணமே செய்து கொள்ளவில்லை, வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 திருமணப்பத்திரிக்கை இந்த வழக்கிற்காக நான் தயார் செய்து தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. சகாதேவனுக்கு 1973ம் வருடத்திலேயே 1ம் பிரதிவாதியுடன் திருமணம் நடைபெற்று 1979ம் வருடம் 2ம் பிரதிவாதியும், 1983ம் வருடம் 3ம் பிரதிவாதியும், 1986ம் வருடம் 4ம் பிரதிவாதியும் பிறந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பிரம்மபுரம் என்ற ஊரைச்சேர்ந்தவர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியும். மேற்படி 1ம் பிரதிவாதி எனக்கு உறவினர் என்றாலும் அவருக்கும் சகாதேவனுக்கும் திருமணம் நடைபெற்ற விவரம் எனக்குத் தெரியும் என்றாலும் சரியல்ல. ஏன் குடும்ப அட்டையில்

சகாதேவன் பெயர் குடும்பத்தலைவராக அவருடைய புகைப்படம் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் தான் வீட்டில் இருக்கிறேன் என்பதால் எனது புகைப்படம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சகாதேவன் வாக்காளர் அட்டை பெரியகரம் முகவரியில் இருக்கிறதா என்றால் இல்லை, அவர் கடந்த 30 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாக்கு செலுத்தியிருக்கிறாரா என்றால் அவர் பெரியகரத்தில் இருக்கும்போது செலுத்தியிருக்கிறார். வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தது, இப்போது நீக்கி விட்டார்கள். வாக்காளர் பட்டியலில் சகாதேவன் பெயர் இருந்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை. சகாதேவன் எங்கு இறந்தார் என்றால் புத்தூரில் தான் இறந்தார். இறந்த விவரத்தை எனக்கு யார் சொன்னார் என்றால் வேலூரில் உள்ள எனது மாமா சொன்னார். இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் நான் சென்றேன். இறுதி சடங்கை யார் செய்தது என்றால் 1ம் பிரதிவாதி, அவரை சார்ந்தவர்கள் உடலை பெரியகரம் கிராமத்திற்கு எடுத்துச்செல்லக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள், இறுதி சடங்கை நாங்கள் தான் செய்தோம். இறுதி சடங்கை யார் செய்தது என்றால் அவருடைய மகன்கள் செய்தார்கள். சகாதேவனின் இறப்பு சான்று எங்கு வாங்கினேன் என்றால் புத்தூரில் சென்று வாங்கினேன். சகாதேவனின் இறப்பை யார் பதிவு செய்தது என்றால் என்னுடைய தம்பியும், மருமகனும் பதிவு செய்தார்கள். வாரிசு சான்று கேட்டு எங்கு மனு கொடுத்தேன் என்றால் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன். வாரிசு சான்று கொடுத்தார்களா என்றால் நீதிமன்றத்திற்கு சென்று பெற்றுக் கொள்ள சொல்லி அனுப்பி விட்டார்கள். ஏற்கனவே மல்லிகா மற்றும் அவருடைய பிள்ளைகள் சகாதேவனின் வாரிசு சான்றை வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் தான் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்று கொடுக்க மறுத்து விட்டார்கள். வட்டாட்சியர் விசாரணையில் நான் வாரிசு சான்று கொடுத்தற்கு மேல்முறையீடு செய்து நிறுத்தி உள்ளதாக தெரிவித்திருக்கிறேன், அவ்வாறு என்ன மேல்முறையீடு செய்தேன் என்றால் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. 8 முதல் 10 பிரதிவாதிகளை ஏன் இந்த வழக்கில் தரப்பினர்களா சேர்த்திருக்கிறேன் என்றால் பிரச்சினை குறித்து அவர்களுக்கு தெரிவிக்கவே அவர்களை தரப்பினர்களாக சேர்த்தேன். 8 முதல் 10 பிரதிவாதிகள் மீது ஏதேனும் பரிகாரம் இந்த வழக்கில் கேட்டிருக்கிறேனா என்றால் ஓய்வூதியத் தொகையை வாங்கி தர

வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். சகாதேவனுக்கு 1ம் பிரதிவாதியுடன் 1973ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. சகாதேவனுக்கும் எனக்கும் திருமணமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சகாதேவனுக்கு அக்காள் மகள் என்ற உறவு முறை தான் எனக்கும் சகாதேவனுக்கும் என்றாலும் நான் கை குழந்தையுடன் இருந்ததால் அவருடைய நிலங்களை பார்த்துக்கொள்ளவே என்னை பெரியகரம் கிராமத்தில் தங்கியிருக்க அனுமதி அளித்தார் என்றால் சரியல்ல. சகாதேவன் இறக்கும் வரை எந்த பிரச்சினையும் செய்யாமல் இருந்து விட்டு அவர் இறந்த பிறகு பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சகாதேவன் 1974ம் வருடத்திலேயே ஆந்திரா மாநிலத்தில் பணியில் சேர்ந்து விட்டார், அப்போதிலிருந்து அங்கு தான் பணிபுரிந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் வாரிசு சான்று கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்./-வே.ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.